# இலங்கையின் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான பழைய படைப்புகளை ஆவணப்படுத்தல்

## ஆண்டறிக்கை -2023

| | |
|---|---|
| செயற்றிட்டத் தலைப்பு | இலங்கையின் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான பழைய படைப்புகளை ஆவணப்படுத்தல் |
| செயற்றிட்ட எண் | NF/PG/2020/0004 |
| செயற்றிட்ட இடம் | இலங்கை |
| செயற்றிட்டக் காலம் | 2022 - மார்கழி 2023 |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| புரவலர் அமைப்பு | நூலக நிறுவனம் |
| முக்கிய பங்குத்தாரர்கள் | சரவணன் நடராசா, ஞானம் பாலச்சந்திரன், மயூரநாதன் இரத்தினவேல், செல்வமனோகரன், எழுத்தாளர்கள், ஆவணச் சேகரிப்பாளர்கள், தன்னார்வலர்கள் |

நூலக நிறுவனம் 1900 இற்கு முன் இலங்கையில் வெளிவந்த தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஆக்கங்களைப் பட்டியலிட்டு, பாதுகாத்து, அணுக்கப்படுத்துவதை முன்னெடுப்பதற்காக "தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான பழைய படைப்புகள்" செயற்றிட்டத்தை முன்னெடுத்து வருகிறது. அண்மைக் காலமாக இலங்கையில் வெளியிடப்பட்ட பல படைப்புகள் பற்றிய தகவல்கள் archive.org, hathitrust.org போன்ற செயற்றிட்டங்கள் ஊடாக பொதுவில் கிடைக்கத் தொடங்கியுள்ளன. மேலும், நூலக நிறுவனம் பங்கெடுத்த "யாழ்ப்பாண புரட்டஸ்தாந்து டிஜிட்டல் நூலகம்" (jaffnapdl.org) ஓர் ஊக்கியாக அமைந்தது. அவற்றை மையமாகக் கொண்டு,

- இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பில் தற்போது கிடைக்கும் படைப்புக்கள் மற்றும் கிடைப்பதற்கு அரிதான தமிழ் படைப்புக்களை தேடுவதற்கான ஓர் ஊக்கியாக இச்செயற்றிட்டம் ஊடாக, 1900 களுக்கு முற்பட்ட ஆவணங்கள் சேகரிக்கப்பட்டு மின்வருடப்பட்டும் , மென்கோப்பு வடிவிலும் நூலக வலைத்தளத்தில் இணைக்கப்பட்டன.

இச்செயற்றிட்டம் நூலக நிறுவனத்தினால் 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டது.

உள்ளடங்கும் படைப்புக்கள்

- இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பில் தற்போது கிடைக்கும் படைப்புக்களும், கிடைப்பதற்கு அரிதான படைப்புக்களும்.
- இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான விடயங்களை முழுதாகவோ, பகுதியாகவோ கொண்டவை.
- இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் பயன்பாட்டுக்காக வெளியிடப்பட்டவை.
    - இலங்கைத் தமிழ் பேசும் சமூக உறுப்பினரால் ஆக்கப்பட்டவை
    - பிறரால் ஆக்கப்பட்டவை
- இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் பற்றிப் பிறரின் பயன்பாட்டுக்காக ஆக்கப்பட்டவை.
    - இலங்கைத் தமிழ் பேசும் சமூக உறுப்பினரால் ஆக்கப்பட்டவை
    - பிறரால் ஆக்கப்பட்டவை

அடைவுகள்

முன்னோர் ஆவணக செயற்றிட்டத்தின் ஊடாக 2023 ஆண்டு வரை அடையப்பட்ட அடைவுகளை கீழே உள்ள அட்டவணை காட்டுகிறது.

அடைவுகள் வருடாந்த ரீதியாக

| | வருடம் | அடைவு |
|---|---|---|
| 1 | 2020 | 251 |
| 2 | 2021 | 368 |
| 3 | 2022 | 999 |
| 4 | 2023 | 812 |
| 5 | மொத்தம் | **2,430** |

| இல | ஆவண வகை | அடைவுகள் |
|---|---|---|
| 1 | நூல்கள் | 265 |
| 2 | பத்திரிகைகளும் இதழ்களும் | 54 |
| 3 | பிரசுரங்கள் | 50 |
| 4 | அறிக்கைகள் | 445 |

எதிர்கொண்ட சவால்கள்

.

- 1900 இற்கு முற்பட்டு வெளிவந்த தமிழ் மற்றும் ஆங்கிலம் தவிர்ந்த பிறமொழி ஆவணங்களில் இலங்கை பற்றிய குறிப்புகள் காணப்படும் போதும் குறிப்பிட்ட மொழிகள் தொடர்பான விளக்கமின்மையால் அவற்றை ஆவணப்படுத்தல் கடினமாக உள்ளது.
- பெறப்படும் ஆவணங்களில் பதிப்பிக்கப்பட்ட ஆண்டு குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை மாத்திரமே ஆவணப்படுத்தக் கூடியதாக இருந்தது.

கற்றல்களும் பரிந்துரைகளும்

- ஆவணங்களை வழங்கும் செயற்றிட்ட வழிகாட்டிகளிடமிருந்து மட்டும் ஆவணங்களை பெற்றுக்கொள்ளுதலுடன், தேடலை மட்டுப்படுத்தாமல் மேலும் ஏனைய வழிகளில் ஆவணங்களை பெற்றுக்கொள்ள முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.
- இச்செயற்றிட்டம் தவிர்ந்து முன்னெடுக்கப்பட்டு வரும் ஏனைய நூலக செயற்றிட்டங்கள் மூலம் கண்டறியப்படும் 1900 இற்கு முற்பட்ட ஆவணங்களையும் இச்செயற்றிட்டத்துடன் இணைக்கலாம்.
- இந்த செயற்றிட்டத்திற்கு என ஒரு கள ஆய்வாளரை பணிக்கமர்த்தல். இதன் மூலமாக இன்னும் அறியப்பாடத பல ஆவணங்களைத் தேடி அடையாளம் கண்டு சேகரிக்க முடியும்.
- நூலகங்களுக்கிடையே மிக வலுவான தொடர்புகளை ஏற்படுத்தல். குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள நூலகங்களிடையே வலுவான தொடர்புகளை ஏற்படுத்துவதன் மூலமாக 1900 இற்கு முன்னைய ஆவணங்கள் தொடர்பான விபரங்களை பெற முடியும்.
- ஏனைய செயற்றிட்ட கள ஆய்வாளர்களின் உதவியுடன் ஆவணங்களை சேகரித்தல்.
- இலங்கை சார்ந்து இந்தியாவில் பிரசுரிக்கப்பட்ட ஆவணங்களையும் ஆவணப்படுத்தல்.

முடிவுரை

முன்னோர் ஆவணக செயற்றிட்டமானது இலங்கை தொடர்பான 1900 இற்கு முற்பட்டு பிரசுரிக்கப்பட்ட அனைத்து வகையான ஆவணங்களையும் ஆவணப்படுத்துவதை முக்கிய நோக்கமாக கொண்டது. இதனூடாக இதுவரை 528 - நூல்கள், 745 - பத்திரிகைகளும் இதழ்களும், 114 - பிரசுரங்கள், 1040 - அறிக்கைகள் என்பன எண்ணிமப்படுத்தப்பட்டுள்ளன. ஆவணங்களை பெறுவதே இச்செயற்றிட்டத்தின் மிகப் பெரிய சவாலாக உள்ளது. இதற்கான ஆவணங்களை தேடிப்பெற்றுக்கொள்வதற்கான ஒரு வலையமைப்பை உருவாக்கி அது சார்ந்து இச்செயற்றிட்டத்தை முன்னெடுக்கும் போது அதன் நோக்கங்களை எட்ட முடியும்.

பின்னிணைப்பு

[இலங்கையின் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான பழைய படைப்புகளை ஆவணப்படுத்தல்]